# அருள்மிகு மகாலட்சுமி திருக்கோயில் என்கிற

## (அருள்மிகு அஷ்ட லட்சுமி திருக்கோயில்)

## திருப்பவித்ர உற்சவம் – செய்திக் குறிப்பு

**"பவித்ரம்"** என்றால் சுத்தப்படுத்துதல், மேற்கொண்டு சேர்த்தல், மேம்படுத்துதல், மேலும் அதிகரித்தல் என்பது பொருள்.

சிலர் புனிதப்படுத்துதல், சுத்தப்படுத்துதல் என்னும் பொருட்களில் பவித்திரம் + உற்சவம் என்றும் பிரித்து பொருள் கூறுகிறார்கள்.

திருப்பவித்ர உற்சவத்தில் நடைபெறும் சடங்குகளும் நடைமுறைகளும் வெறும் சுற்றுப்புறத்தையோ அல்லது மேலும் சக்தியைக் கூட்டுதல் என்ற பொருளையோ விளக்குவன அல்ல. இறைவன் தன் சக்தியை, சக்தி மூலம் விளையும் பலன்களை பக்தர்களுக்கு அதிகரித்துக் கொடுக்க வேண்டுதல், செய்தல் என்னும் பொருளிலேயே சடங்குகள் மற்றும் சம்பிரதாயங்கள் திருப்பவித்ரோத்சவத்தில் நடத்தப் படுகின்றன.

08.09.2019 அன்று யாக குண்டங்கள் அமைத்து, அருகில் முளைப்பாலிகையிட்டு, பட்டு நூல் சார்த்தப்படுகிறது. புனிதத் தன்மையுடன் மஞ்சள் கால் சார்த்தி, தினமும் யாகசாலை தொடங்கி சாற்று முறை மற்றும் பூர்ண ஆகுதியுடன் 13.09.2019 மாலை பவித்ரோத்சவம் நிறைவடைகிறது.

5 நாட்கள் ஹோமம், பிரபந்தங்கள், மந்திரங்கள் உச்சரித்த, ஆகுதிகள் செய்தல் போன்றவற்றில் வைத்த கலச நீரைக் கொண்டு மேலும் இறை சக்தியைக் கூட்டி மக்களுக்கு அருள மகாலட்சுமிக்கும், மகாவிஷ்ணுவுக்கும் சிறப்புத் திருமஞ்சனம் 13.09.2019 அன்று நடத்தப்படவுள்ளது.

இத்திருக்கோயிலில் 08.09.2019 அன்று தொடங்கப்படும் பவித்ரோத்சவத்தில் நான்கு யாக குண்டங்கள் அமைக்கப்பட இருக்கின்றன.

தெற்குப் புறத்தில் அரைவட்ட வடிவ **"பிரத்யும்னன்"** என்னும் குண்டமும், மேற்குப்புறத்தில் **"அனிருத்தன்"** என்னும் வட்ட வடிவ குண்டமும், வடக்குப் புறத்தில் **"சங்கர்ஷணன்"** என்னும் முக்கோண வடிவ குண்டமும், கிழக்குப் புறத்தில் **"வாசுதேவன்"** என்னும் சதுர வடிவ குண்டமும் அமைக்கப்பட உள்ளன.

இவை **"நவபத்ம மண்டலம்"** என்னும் யந்திரத்தைச் சுற்றி அமைக்கப்படும். இரண்டு கும்பங்கள் நிறுவப்பட உள்ளன.

அக்னி மூலையில் "மகா கும்ப" ஸ்தாபனம் 10 கும்பங்களுடனும், ஈசான்ய மூலையில் சோம கும்ப ஸ்தாபனம் 10 கும்பங்களுடனும் அமைக்கப்பட உள்ளது.

இந்த யாக சாலைக்கு நான்கு வாயில்களும் ஒவ்வொரு வாயிலிலும் துவாரபாலிகைகளாக பாவித்து இரண்டு கலசங்களும், வாயில்களின் முன்புறம் வெள்ளை, மஞ்சள், கறுப்பு, நீலம் ஆகிய நான்கு வகையான பதாகைகளும் கட்டப்படுகின்றன.

இவை எல்லாவற்றையும் அமைத்து 08.09.2019 அன்று மாலை மந்திரம் மூலமாக குண்டங்களில் அக்னி பிரதிஷ்டை பாஞ்சராத்திர ஆகம ஜெயாக்கிய பிரிவின்படி தொடங்கி நடத்தப்பட உள்ளன.

இத்திருப்பவித்ரோத்சவத்தின் மூலம் இறைவனின் அருளாற்றல் அதிகரிக்க வேண்டப்படுவதுடன், இதில் கலந்து கொள்பவர்களுக்கு உடம்பில் ஏற்படக்கூடிய நோய்கள் நீங்கி, பில்லி, சூனியம், ஏவல் முதலியவற்றால் வரக்கூடிய துன்பங்கள் விலகும். நலம் கிட்டும். மனம், மெய் பவித்ரம் அடையும். அல்லல்கள் தீரும்.

திருப்பவித்ரோத்சவம் உத்தமமானது என்று சொல்லப்படுகிறது. உத்தமமான ஆவணி மாதத்தில் இந்த திருப்பவித்ரோத்சவம் 08.09.2019 அன்று மாலை அங்குரார்ப்பணம் தொடங்கி, 09.09.2019, 10.09.2019, 11.09.2019, 12.09.2019, 13.09.2019 ஆகிய நாட்களில் காலை, மாலை இருவேளைகளிலும் யாக சாலையில் யாகங்கள், ஹோமம் நடந்து இறைவனுக்கும் இறைவனின் மூலம் பக்தர்களுக்கும் அருளாற்றல் அதிக அளவில் கிடைக்கும் வகையில் நடத்தப்படுகின்றது.

13.09.2019 அன்று மாலை மகாபூர்ணாஹுதி எனும் பவித்ரோத்சவ நிறைவு ஆகுதி நடைபெறும்.

து. சந்திரசேகரன், எம்.ஏ.,
செயல் அலுவலர்

மு. ஜோதி லட்சுமி, எம்.ஏ., பி.எல்.,
தக்கார் / உதவி ஆணையர்